தினமணி

# மனித உரிமை ஆர்வலர் தீஸ்தா செதல்வாட் கைது: மதுரையில் பல்வேறு கட்சியினர் ஆர்ப்பாட்டம்

**மதுரை, ஜூன் 27:** குஜராத் மனித உரிமை ஆர்வலர்கள் தீஸ்தா செதல்வாட், காவல்துறை அதிகாரி ஸ்ரீகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மதுரையில் மனித உரிமை அமைப்புகளின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

குஜராத் மாநிலம் கோத்ராவில் நடைபெற்ற ரயில் எரிப்பு சம்பவத்தைத்தொடர்ந்து 2002-இல் நடைபெற்ற கலவரம் தொடர்பாக மனித உரிமை ஆர்வலர் தீஸ்தா செதல்வாட் மற்றும் காவல் துறை அதிகாரி ஸ்ரீ குமார் ஆகியோர் குஜராத் உயர் நீதிமன்றம், உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்தனர். இந்நிலையில், இருவரும் சில நாள்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டனர். மனித உரிமை ஆர்வலர்களான தீஸ்தா செதல்வாட் மற்றும் ஐபிஎஸ் அதிகாரி ஸ்ரீகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் எதிர்க் கட்சிகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகே உள்ள திருவள்ளுவர் சிலை முன்பாக பல்வேறு கட்சிகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்துக்கு மக்கள் கண்காணிப்பக நிர்வாகி ஹென்றி திபேன் தலைமை வகித்தார். இதில் மாநகராட்சி துணை மேயர் தி. நாகராஜன், சிஐடியூ சங்க மாவட்டத் தலைவர் இரா. தெய்வராஜ், மாநகராட்சித் தொழிலாளர் சங்க பொதுச்செயலர் பாலசுப்ரமணியன், மதிமுக தொழிற்சங்க நிர்வாகி எஸ். மகபூப்ஜான் மற்றும் விடுதலைச்சிறுத்தைகள் கட்சியினர், மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர், மனித நேய மக்கள் கட்சி, எஸ்டிபிஐ கட்சி, தமிழ்ப்புலிகள், மே 17 இயக்கம் உள்பட பல்வேறு அமைப்புகளில் இருந்து பங்கேற்றனர்.